செ.வெ.எண்: 43 / பிப்ரவரி நாள்: 22.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கண்காணிப்புக்குழு, பறக்கும்படை மற்றும் நிலையான கண்காணிப்புக்குழு போன்ற தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக தகுதி வாய்ந்த நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கலாம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

எதிர்வரும் 2016 சட்டமன்ற தேர்தலையொட்டி இராமநாதபுரம் மாவட்டத்தில் வீடியோ கண்காணிப்புக்குழு, பறக்கும்படை மற்றும் நிலையான கண்காணிப்புக்குழு போன்ற தேர்தல் வேட்பாளர் செலவின பணிகளை கண்காணிக்கவும் மற்றும் தேர்தல் தொடர்பான முக்கிய நிகழ்வுகளை படம் பிடித்திடவும் தேவையான வீடியோ கருவிகள் மற்றும் தகுதி வாய்ந்த வீடியோகிராபர்களை கொண்ட ஏஜென்ஸிகள் மற்றும் நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகளின்(Tender) மூலம் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகள் மற்றும் உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் நியமனம் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான விவரங்கள் www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளன. அதனைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து வருகின்ற 07.03.2016 பிற்பகல் 3 மணிக்குள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் அறையில் உள்ள சீலிடப்பட்ட மூடிய பெட்டியில் ஒப்படைக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் தொடர்பான நெறிமுறைகள் குறித்த முன்கூட்டம் மாவட்டஆட்சியர் அவர்களால் 29.02.2016 காலை 11.00 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**